Regional Bulletin / Puducherry / Tamil Script / 28-04-2024

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

தேதி : 28.04.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

3 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளதை அடுத்து முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்தியில் பாரதிய ஜனதா கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இந்தியாவில் ஒலிம்பிக் போட்டி நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கு என சிறப்பு நிதி ஒதுக்கப்படும் என்றும் ஏழைகள், மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் வளர்ச்சிக்காக காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்றும் காங்கிரஸ் பொது செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று முதல் 5 நாட்களுக்கு வெயிலின் தாக்கம் கூடுதலாக 2 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

3 ஆம் கட்ட தேர்தல் (19)

3 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது. முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பல்வேறு தொகுதிகளில் தங்கள் வேட்பாளர்களை ஆதரித்து பேரணி மற்றும் பொதுக் கூட்டங்களில் பங்கேற்று தங்கள் வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரித்து வருகின்றனர். இந்த 3 ஆம் கட்ட தேர்தலில் 10 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களில் உள்ள 95 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு வரும் மே 7 ஆம் தேதி தேர்தல் நடைபெறுகிறது. இதில் ஆயிரத்து 351 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி இன்று கர்நாடகாவில் 4 பேரணிகளில் பங்கேற்று, உரையாற்றினார். இன்று காலை கர்நாடகாவின் பெலக்காவியல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், கடந்த 10 ஆண்டுகளில் சிறு விவசாயிகளுக்கு உழவர் உற்பத்தியாளர் அமைப்பு மூலம் இடுபொருள் செலவை குறைத்து வேளாண் பொருட்களுக்கான சந்தையை திறக்க தனது அரசு முயற்சிகள் மேற்கொண்டதாக தெரிவித்துள்ளார். 10 கோடிக்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் நிதி உதவியின் மூலம் பயனமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், எரி பொருளுடன், எத்தனாலை கலப்பதன் மூலம் விவசாயிகளால் 70 ஆயிரம் கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

*பிரதமர் கோவா 1 (18)*

மத்தியில் பாரதிய ஜனதா கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இந்தியாவில் ஒலிம்பிக் போட்டி நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். கோவாவில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர் இந்த மாநிலம் கால்பந்து விளையாட்டிற்கு பிரசித்தி பெற்றது என்பதை சுட்டிக் காட்டினார். விளையாட்டு ஆர்வலர்கள் அதிகம் உள்ள இந்த ஊருக்கு தாம் அளிக்கும் வாக்குறுதி இது என்றும் அவர் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய பிரதமர், நாடு சுதந்திரம் அடைந்த பிறகு பொறுப்பெற்ற அரசு மீனவர்கள் நலனில் அக்கறை காட்டவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார். பாஜக ஆட்சியில் தான் மீனவர்களுக்கு தனி அமைச்சகம் அமைக்கப் பட்டதுடன் அவர்களுக்கு கிஷான் கடன் அட்டைகளும் வழங்கப்பட்டதாக பிரதமர் தெரிவித்தார். முன்னதாக அவர், மகராஷ்டிர மாநிலம் சோலாப்பூரில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணி 3 ஆவது முறையாக ஆட்சி அமைப்பது உறுதி என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்துவதில் தேசிய ஜனநாயக கூட்டணியின் சாதனைகளுடன் ஒப்பிட முடியாது என்பதால் தான், காங்கிரசும், அதன் கூட்டணி கட்சிகளும் காஷ்மீருக்கு மீண்டும் சிறப்பு அந்தஸ்து வழங்கப்படும் என

கூறி வருவதாக அவர் தெரிவித்தார். காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால் குடியுரிமை திருத்த சட்டத்தை கைவிட்டு விடுவார்கள் என்றும் பிரதமர் தெரிவித்தார். காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால், வருடத்திற்கு ஒரு பிரதமரை மாற்றுவார்கள் என்றும் அவர் விமர்சித்தார். கர்நாடகாவில் நடைபெறும் மக்களவை தேர்தலில் 2 ஆம் கட்ட வாக்குப்பதிவை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி அம்மாநிலத்தில் 2 நாள் சுற்றுப் பயணம் மேற் கொள்ள உள்ளார். கர்நாடகாவில் மொத்தம் உள்ள 28 தொகுதிகளுக்கு 2 கட்டங்களாக வாக்குப் பதிவு நடைபெறுகிறது. இதன்படி, நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்குப் பதிவில், 14 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றது. 2 ஆம் கட்டமாக கர்நாடகாவில் வரும் மே 7 ஆம் தேதி மீதமுள்ள 14 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற உள்ளது. முதற்கட்ட தேர்தலில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்ட பிரதமர், 2 ஆவது கட்ட தேர்தல் நடைபெறும் இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்டுள்ளார்.

மறுவாக்குப்பதிவு (7)

மணிப்பூர் மாநிலத்தில் 6 வாக்குச்சாவடியில் வரும் 30 ஆம் தேதி மறு வாக்குப்பதிவு நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இந்த வாக்குச் சாவடிகளில் கடந்த 26 ஆம் தேதி நடத்தப்பட்ட வாக்குப் பதிவின் போது வன்முறை சம்பவம் நடந்ததை முன்னிட்டு மறு வாக்குப்பதிவு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதே போன்று, கர்நாடக மாநிலத்தில் உள்ள ஒரு தொகுதியிலும் வரும் 30 ஆம் தேதி மறு வாக்குப்பதிவு நடத்தப்படும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

கார்கே (19)

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் தங்களது கட்சியின் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள 5 உத்தரவாதம் மற்றும் 25 வாக்குறுதிகள் அனைத்தும் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்று காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே தெரிவித்துள்ளார். அசாம் மாநிலம் கவுகாத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த தேர்தலில் பாஜக அளித்த வாக்குறுதிகளை பிரதமர் இதுவரை நிறைவேற்றவில்லை என்று கூறினார். நாட்டின் சுதந்திரத்திற்காக காங்கிரஸ் கட்சி தான் போராடியதே தவிர பாஜக வினர் யாரும் ஒரு போதும்,சுதந்திரத்திற்காகவோ, நாட்டின் வளர்ச்சிக்காகவோ பாடுபட்டதில்லை என்று அவர் கூறினார். மேலும்,

பாஜக வினர் தங்களை தேசப் பற்று மிக்கவர்கள் போல் காட்டிக் கொள்வதாக திரு கார்கே குற்றம் சாட்டினார். காங்கிரஸ் கட்சி தேவையில்லை என்றால், எதற்காக அவர்கள் இந்த கட்சியில் 30 முதல் 40 ஆண்டுகள் வரை இருந்தார்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பினார். நாட்டின் ஜனநாயகத்தை காப்பாற்ற இந்த தேர்தல் மிக முக்கியமானது என்றும் அவர் தெரிவித்தார். பாஜக வினர் ஏழைகளின் வரிப்பணத்தை எடுத்து, பணக்காரர்களுக்கு கொடுப்பதாக அவர் குற்றம் சாட்டினார். குறிப்பாக, தொழிலதிபர்களின் 16 லட்சம் கோடி கடன்களை தள்ளுபடி செய்த மத்திய அரசு ஏழைகள் மற்றும் விவசாயிகளின் கடன்களை ஏன் தள்ளுபடி செய்ய மறுப்பதாக அவர் தெரிவித்தார்.

*ராகுல்காந்தி (8)*

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு ராகுல்காந்தி இன்று ஒடிசா மாநிலத்தில், கேந்திரபாரா மக்களவை தொகுதிக்கு உட்பட்ட சாலிப்பூரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். மத்தியில் தனது கட்சி ஆட்சிக்கு வந்தால் வேலையில்லாத இளைஞர்களுக்காக வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். முன்னதாக அவர், உத்கல் கவுரப் மதுசூதன் தாஸின் பிறந்த

தினத்தை முன்னிட்டு அவரது சொந்த ஊரில் அமைக்கப்பட்டுள்ள சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

*பிரியங்கா* (19)

நாட்டின் ஜனநாயகத்தை பலவீனப்படுத்தவே பாஜக விரும்புகிறது என்று காங்கிரஸ் பொது செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார். குஜராத் மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கு என சிறப்பு நிதி ஒதுக்கப்படும் என்று கூறினார். அத்துடன், ஏழைகள், மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் வளர்ச்சிக்காக காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்றும் அவர் தெரிவித்தார். நாட்டில் உள்ள 30 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதுடன், நகர்புறங்களிலும் 100 நாள் வேலை உறுதி திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அவர் உறுதி அளித்தார். 10 ஆண்டு கால பாஜக ஆட்சியில் ஏழைகளுக்கு அநீதி இழைக்கப்பட்டு இருப்பதாக அவர் தெரிவித்தார். தொடர்ந்து மகராஷ்டிரா மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் வேலை வாய்ப்பின்மையும், பண வீக்கமும் தான் அதிகரித்திருப்பதாக குற்றம் சாட்டினார். நாட்டில் 70 லட்சம் பேர் வேலையின்றி தவித்து வரும் நிலையில், 30 லட்சம் அரசு பணியிடங்கள்

காலியாக இருப்பதாக திருமதி பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார். காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால் வேளாண் பொருட்கள் மீதான ஜிஎஸ்டி வரி ரத்து செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

*அனுராக் சிங்* (10)

ஜாதி-மத அடிப்படையிலான பிரிவை ஏற்படுத்துவதே காங்கிரஸ் கட்சியின் நோக்கம் என பாஜக மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சருமான திரு அனுராக் சிங் தாக்கூர் தெரிவித்துள்ளார். இமாச்சல் மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர் மத்திய அரசின் கடந்த 10 ஆண்டு கால சாதனைகளை எடுத்துக் கூறினார். ஏழைகளுக்கு வீடுகள், இலவச எரிவாயு இணைப்பு, இஸ்லாமியர்களுக்கு அவர்களின் உரிமைகளை வழங்கியது உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை அவர் பட்டியலிட்டார். காங்கிரஸ் கட்சி குறித்து பேசிய அவர், மக்களிடையே சாதி-மத அடிப்படையிலான பிரச்சனைகளை ஏற்படுத்தி வருவதாக குற்றம் சாட்டினார்.

*பிரச்சாரம்* (7)

பாஜக மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா இன்று கஸ்கஞ்ச் மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பேரணியில்

பங்கேற்ற உரையாற்றினார். அயோத்தியில் ராமர் பிரான் பிரதிஷ்டை நிகழ்ச்சியில் பங்கேற்காத எதிர்கட்சிகளை அவர் சாடினார். பாஜக தேர்தல் அறிக்கையில் கூறிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி உள்ளதாக அவர் தெரிவித்தார். தொடர்ந்து அவர் இன்று மைன்புரி மற்றும் எட்டாவாவில் நடைபெற்ற பேரணிகளில் பங்கேற்று உரையாற்றினார்.

*சுரங்க அமைச்சகம்* (7)

மத்திய சுரங்க அமைச்சகம் சார்பில் கனிம உச்சி மாநாடு நாளை புதுடெல்லியில் நடைபெற உள்ளது. இந்தியாவின் விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் சுத்தமான எரிசக்தி போன்றவற்றை கருத்தில் கொண்டு இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சுரங்க அமைச்சகம் தெரிவித்துள்ளது. மாநாட்டில், தொழில் துறை தலைவர்கள், தொடக்க நிறுவனங்கள், அரசு அதிகாரிகள், விஞ்ஞானிகள், கல்வியாளர்கள் மற்றும் சர்வதேச பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.

வானிலை (17)

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று முதல் 5 நாட்களுக்கு வெயிலின் தாக்கம் கூடுதலாக 2 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகம் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிளில் வறண்ட வானிலையே நிலவும் என்றும், அதிகபட்ச வெப்ப நிலை அடுத்த 5 நாட்களுக்கு படிப்படியாக 2 டிகிரி செல்சியஸ்அளவுக்கு உயரக் கூடும் என்றும் அந்த மையம் மேலும் தெரிவித்துள்ளது. தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்ப நிலை 36 டிகிரி செல்சியஸ் முதல் 37 டிகிரி செல்சியஸ் வரை இருக்கக் கூடும் என்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை 27 டிகிரி செல்சியசில் இருந்து 28 டிகிரி செல்சியஸ் வரை இருக்கக் கூடும் என்றும் தெரிவித்துள்ளது. இதனிடையே, மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால் கன்னியாக்குமரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும் என்றும், ஏனைய தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

3 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளதை அடுத்து முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்தியில் பாரதிய ஜனதா கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இந்தியாவில் ஒலிம்பிக் போட்டி நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கு என சிறப்பு நிதி ஒதுக்கப்படும் என்றும் ஏழைகள், மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் வளர்ச்சிக்காக காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்றும் காங்கிரஸ் பொது செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று முதல் 5 நாட்களுக்கு வெயிலின் தாக்கம் கூடுதலாக 2 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.